**பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் : திரு.ச.வைத்தியநாதன் எம்.ஏ.,**

**ந.க. E/484521/COLREV-COLR/58875/2023-A3 நாள்: 13.03.2024**

பொருள் : பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதி –ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுகள் (தொகுதி – IV) (தேர்வு நடைபெற்ற நாள் 24.07.2022) – இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் – பெரம்பலூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியிடம் வழங்கப்பட்டது – இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

படிக்கப் பட்டவை :

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண். 2282/PSD-F1/2023, நாள்: 13.09.2023.
2. பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க. E/484521/COLREV-COLR/58875/2023-A3 நாள்.25.09.2023
3. வேப்பந்தட்டை வருவாய் வட்டாட்சியரின் கடிதம், ந.க.அ3/7192/2023, நாள்: 02.01.2024
4. ஆலத்தூர் வருவாய் வட்டாட்சியரின் கடிதம், ந.க.அ1/355/2023, நாள்: 28.12.2023

******

**ஆணை**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம், 24.07.2022 அன்று நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வுகள் (தொகுதி – IV) மூலம் இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை (1)-இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடிதம் வாயிலாக பெரம்பலூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (2)-இல் காணும் செயல்முறைகளின் படி, பெரம்பலூர் மாவட்டத்தில் கலம் (2) இல் கண்டுள்ள அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடம் வழங்கப்பட்டு நாளது வரை பணிபுரிந்து வருகின்றனர்.

| வரிசை எண் | இளநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மற்றும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்த நாள் | பணியில் வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] |
| 1. | ம.திவாகர்,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>பெரம்பலூர். | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

| | | | |
|---|---|---|---|
| 2. | கா.சரவணகுமார்,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>பெரம்பலூர். | 29.09.2023<br>முற்பகல் | 29.09.2023<br>முற்பகல் |
| 3. | அ.நவீன்பிரிட்டோ,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>பெரம்பலூர். | 29.09.2023<br>முற்பகல் | 29.09.2023<br>முற்பகல் |
| 4. | த.ரம்யா,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>ஆலத்தூர். | 29.09.2023<br>முற்பகல் | 29.09.2023<br>முற்பகல் |
| 5. | செ.பிரியதர்ஷினி,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>பெரம்பலூர். | 29.09.2023<br>முற்பகல் | 29.09.2023<br>முற்பகல் |
| 6. | மா.செந்தில்குமார்,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>வேப்பந்தட்டை. | 29.09.2023<br>முற்பகல் | 29.09.2023<br>முற்பகல் |

மேற்படி நபர்களுக்கு பணிவரன்முறை செய்வது தொடர்பாக வரப்பெற்ற பார்வை (3) மற்றும் (4)-இல் கண்ட முன்மொழிவுகள் மற்றும் தனியர்களின் பணிப்பதிவேடுகள் பரிசீலனை செய்யப்பட்டதில் மேற்கண்ட 06 நபர்களின் பணியினை கலம் 3-ல் காணும் பணியில் சேர்ந்த நாளில் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன் முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

தனியர்கள் இரண்டு ஆண்டு தகுதிகாண் பருவத்தினை தொடர்ச்சியான மூன்று ஆண்டுக்குள் முடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தியும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

13/3/2024

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(பொது),
பெரம்பலூர்.

(10/10)

**பெறுநர்**

தொடர்புடைய நபர்கள்.

**நகல்**

13/3/24

1. வட்டாட்சியர் அலுவலகம், வேப்பந்தட்டை.
2. வட்டாட்சியர் அலுவலகம், ஆலத்தூர்.
3. உதூர் தலைமை உதவியாளர் 'ஏ' பிரிவு.
4. உபரி நகல்- 'அ3' இருக்கை